ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கேசவப்பெருமாள் பதிகம்.

சென்னை சூளை

நிரஞ்சனவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கேசவப்பெருமாள் பதிகம்.

சடகோபர் துதி-வெண்பா:

சீரார்தவமுனிவர் சேர்கான்பரியூர்வாழ்
ஏராருங்கேசவன்றனின்னடியிற் போரார்
திடமாகவோர்பதிகஞ் சிந்தையுடன்செப்பச்
சடகோபனேயருணீ தா.

ஆசிரியவிருத்தம்.

திருமணியிமைக்கு மகுடசேகரமுந் திருவருட் பொழியு நேத்திரமுந், தெருளணிமதியை யனையமா முகமுஞ் செப்புதற்கரிய செங்கரமும், மருவியவேதச் சிலம்பொலிபதமும் வறியனேன்காண வந்தருள்வாய், கெருடவாகனனே கான்பரியூர்வாழ் கேசவா மாசிலா மணியே. 1

தஞ்சமென்றடைந்த கஜேந்திரனிடுக்கந் தவிர்த்தி டவில்லையா முன்ன, மஞ்சிடா துயருங் கிரிதனைத் தூக்கி யாவரைக் காத்திடவில்லையா, வஞ்சனையில்லாம லென்ற னைக்காக்க மனமிரங்காவித மென்னே, கிஞ்சகமுலவுங் காஞ்பரியூர்வாழ் கேசவா மாசிலாமணியே. 2

கொடுமைசெய்பத்மா சூரனையெரித்த கொண்டல் வண்ணு வுனக்குகந்த, அடிமையென்றெண்ணு திருந் திடி லுன்னை அனைவருப்வைகுவ ரன்றோ, கெடுகிலுங் கவலை கொள்ளுமென்பலத்தை நீக்கியாண்டிடுவதுன் கடனுங், கெடுமையில்லாத காஞ்பரியூர்வாழ் கேசவா மாசிலாமணியே, 3

மருமலர்க்குழலிற் சொருகுமின்மடவார் மயல்வலை ப்பட் டகமகிழ்ந்து, பொருடனையுலகி லீட்டிநின்றிவ்வ பொற்பதத் துணையினைமறந்து, கருங்கடற் றுரும்புபோ லலைந்திடுமிக் கடையனைக் காத்தருள் புரிகுவாய், இருதுகள் வளருங் காஞ்பரியூர்வாழ் கேசவா மாசி லாமணியே, 4

அரிகரிவீர ராகவாவேத வாதிநாராயணா முகுந்தா, கரிவரதா, கோபாலா கோவிந்தா கர்த்தனே மாயவாவுன்றன், விரிமலரடியைத் துதித்திடவறியா வினையனேன்றன்னை யாள்குவையே, கிரிவளர்ந்தோங்குங் கான்பரியூர்வாழ் கேசவா மாசிலாமணியே. ரு

சுரந்தலைவலி காமாலைவெண்குட்டஞ் சோகைநீரிழிவு விப்புருதி, உரம்பெறுபேய் சூனியமுதலிய யாவுமுன் றிருச்சன்னிதி காணப், பரிதியைக்கண்ட பனியெனவகலும் பகரவுன்மகிமை யென்றாமோ, கிரணமாமதில்சூழ் கான்பரி யூர்வாழ் கேசவா மாசிலாமணியே. சு

தந்தைசொல்மிக்க மந்திரமிலெனச் சாற்றியமொழிதனை யகற்றி, அந்தநற்பிரக லாதனைக்காத்த வருநரசிங்கமே யரசே, எந்தையேயடியே னினிப்பிறவாமலிருந்திட நீ யருள்புரிவாய், கொந்துவானரஞ் சூழ்கான்பரியூர்வாழ் கேசவா மாசிலாமணியே. எ

ஒன்றிரண்டல்லவே யென்குறை யெழுத வோலையிலடங்கிடா தந்தோ, வின்றுசன்னிதிமுன் னிருந்து

சேய்க்கதற வெங்குவந்தா யுனக்கென்ன, வென்றுகேளா மலிருந்திடின் முனமிவ் வேழையேன் செய்தவப் பயனே, கின்னரர்துதிக்கும் கான்பரியூர்வாழ் கேசவா மாசிலாமணியே. அ

ஒளிரு கெய்யுந்தண் டிருந்துழாயும் கொண்டுள்ளோர்வினைகளை யோட்டத், தெளிவுடன்வழங்கி வருவதைக்கேட்டுத தேடியான்வந்து நின்றேன், உன்னிரு கமலக் கடைக்கணுனேக்கி நல்லருளீந்திடிற் பெரிதோ கிளரனமுலவுங் கான்பரியூர் கேசவா மாசிலாமணியே.

என்ன தீவினையைப் புரிந்தனனந்தோ வேழையேனின்னதென் றறியேன், பன்னுருமுனது மலர்ப்பதநாளும் பணியுமென் மனக்குறை யகற்ற, வின்னிலத் தேவந் தருள்புரியாம லிருப்பதுன்சீர்க் கழகாமோ, கின்னரிமுழங்குங் கான்பரியூர்வாழ் கேசவா மாசிலாமணியே. ம

அற்புதவிபீஷணற்கு முன்னபயமளித்த வைகுந்தவாசாநின், பொற்புறுமலர்த்தாடு திக்கவுநாவிற் பொ

ருந்திடக் கல்வியும் புகழுஞ், சற்பனரிணக்கமும் பெரு
நிதியுந்தமியனுக் கீந்துகாத்தனிப்பாய், கெற்பனங்கள்
சூழ் கான்பரியூர்வாழ் கேசவா மாசிலாமணியே, 11

கேசவப்பெருமாள் பதிகம்

முற்றிற்று.

கேசவப்பெருமாள் பேரில்

கீர்த்தனம்.

இ-ம் நாதநாமக்கிரியை தாளம் ரூபகம்.

பல்லவி

இதுநல்லசமையம் அருள்ரிஷிகேசவா
இதுநல்லசமையம்

அநுபல்லவி,

பதியினிற்சிறந்தகான் பரியூரிலெந்நாளும்
பாசமுடனமரும் கேசவனேநீவா இது

சரணங்கள்,

தொண்டர்கடகுடசிறு தொண்டனென்றெண்ணிஎன்
பண்டைவினையகற்றிப் பாலகனைக்காக்கவே இது

தாயிலாப்பிள்ளைபோற் றளர்ந்தழுதேங்குமிச்
சேயின்குறையகற்றி திருவருள்செய்யவே இது

அருட்டுதெய்வமென! றருமறைதுதிப்போனே
இருளையகற்றியிவ் வேழையைக்காககவே இது

மாதர்வலையிற்சிக்கி மயக்கிவீழாமலுன்
பாதத்தைநாடோறும் பணிந்திடவாரந்தா இது

சுற்றிவந்துன்றனை நித்தந்துதிசெய்யும்
பத்தனும்ராஜகோ பாலனுக்கருள்செய்ய இது

கீர்த்தனம் முற்றிற்று,